In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 78/2023 | Prosecution witness P.W.4 |
| Name: Vivek | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 02.03.2026.

**(Accused 1 and 2 present.)**

முதல் விசாரணை :–

நான் தற்சமயம் திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு நான் வடமதுரை காவல் நிலையத்தில் கிரேடு 2 போலீசாராக பணிபுரிந்துவந்தபோது 26.06.2022ம் தேதி மாலை 3 மணிக்கு வத்தலப்பட்டி பஸ்ஸ்டாப்பில் நானும் என்னுடன் மணிகண்டன் கிரேடு 1 பிசி கூம்பூர் காவல் நிலையம் நாங்கள் இருவரும் டுட்டி பார்த்துக்கொண்டு இருந்தோம். அப்போது TN–57–G–0697 என்ற ஈச்சர் வாகனம் ஊர்க்காவல்படையினரை ஏற்றிக்கொண்டு நடகோட்டையிலிருந்து விருவீடு நோக்கி சென்று சென்றுகொண்டிருந்தது. அந்த வண்டி வத்தலப்பட்டி பஸ்ஸ்டாப்பில் வந்து நின்றது. மேற்படி ஈச்சர் வாகனம் நின்ற பிறகு மேற்படி வண்டியின் பின்பக்க கண்ணாடி உடையும் சத்தம் கேட்டது. அப்போது எதிரிகள்இருவரும் அங்கு வந்து சத்தம் போட்டார்கள். போலீசார் என்றால் பெரிய இவன்களா என்று சொல்லி சத்தம்போட்டார்கள். இருசக்கர வாகனத்தை மோதிவிட்டு நிற்காமல் போகிறாய் என சத்தம் போட்டார்கள். அப்போது ஊர்க்காவல் படையைச்சேர்ந்த ராஜலட்சுமி, கவிப்பிரியா, கவிதா, குமரேசன் ஆகியோர்கள் வண்டியிலிருந்து இறங்கினார்கள். இறங்கி கீழே நிற்கும்போது 2வது எதிரி சிவபாண்டி கல்லைக்கொண்டு எறிந்ததில் ராஜலட்சுமி(அசா1)

யின் இடது தோள்பட்டையிலும் இடது முதுகிலும் பட்டது. வலியால் ராஜலட்சுமி கத்தினார். எதிரிகள் இருவரும் கெட்டவார்த்தை பேசி கொலை மிரட்டல் விடுத்தார்கள். அந்த வழியாக வந்த அரசு பேருந்தில் மேற்படி நால்வரும் விருவீடு காவல் நிலையம் சென்றார்கள். நடந்த சம்பவத்திற்கு ராஜலட்சுமி புகார் கொடுத்தார். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–

ஆய்வாளர் விசாரணையில் ஈச்சர் வாகனத்தை ஓட்டிவந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் பழனிச்சாமி அங்கு நின்றுகொண்டிருந்த இருசக்கர வாகனத்தில் மோதிவிட்டார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சரியல்ல. அந்த விபத்தில் 2ம் எதிரியும் அவரது சகோதரரும் ஓடையில் விழுந்துவிட்டார்கள் என்றால் அதை நான் பார்க்கவில்லை. மேற்படி இருவரும் அந்த விபத்தில் ஓடையில் விழுந்துவிட்டதாகவும், நான் அந்த இடத்தில் இல்லாததால்தான் அதை நான் பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஈச்சர் வண்டி நின்றபிறகு அரை மணி நேரம் அங்கிருந்திருப்போம். உடனடியாக 108 ஆம்புலன்ஸ் அங்கு வந்து 2ம் எதிரியையும் அவரது சகோதரரையும் மருத்துவமனைக்கு ஏற்றிச்சென்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் நான் அதை பார்க்கவில்லை. நான் ஈச்சர் வண்டியை எடுத்துக்கொண்டு விருவீடு காவல் நிலையம் சென்றுவிட்டேன். வண்டியை நான் ஓட்டிச்சென்றேன். விருவீடு காவல் நிலைய சார்பு ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்து சிறப்பு சார்பு ஆய்வாளர் பழனிச்சாமியை கூட்டிச் சென்றுவிட்டார். அன்றைய தினம் அங்கு என்னுடைய பணி என்னவென்றால் சீமான் சோலார் சிஸ்டம் சம்மந்தமாக வந்திருந்ததால் நான் நடக்கோட்டைக்கு சென்றுவிட்டேன். யார் சொல்லி ஈச்சர் வண்டியை காவல் நிலையத்திற்கு எடுத்துச்சென்றேன் என்றால் சார்பு ஆய்வாளர் கலையரசன் சொல்லி எடுத்துச்சென்றேன். சிறப்பு சார்பு ஆய்வாளர் பழனிச்சாமி குடிபோதையில் இருந்ததால் அவரால் வண்டியை எடுக்கமுடியாததால் நான் வண்டியை காவல்

நிலையத்திற்கு எடுத்துச்சென்றேன் என்றால் அவர் குடிபோதையில் இருந்தது எனக்குத் தெரியாது. சம்பவ இடத்தில் சுமார் 50 பேர்கள் இருந்தார்கள். எஸ்எஸ்ஐ பழனிச்சாமியை காவல் நிலையம் கூட்டிச்சென்றார்கள். அங்கிருந்து அவரை எங்கு கூட்டிப்போனார்கள் என்றால் எனக்குத் தெரியாது. எஸ்எஸ்ஐ பழனிச்சாமியை முருகன் என்ற காவலர் வத்தலக்குண்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்ற விவரம் எனக்குத் தெரியாது. எஸ்எஸ்ஐ பழனிச்சாமி குடிபோதையில் வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்றும் அவரை காப்பாற்றவேண்டி அவரை பணிநீக்கம் செய்யாமல் இருப்பதற்காகவும் நாங்கள் முந்திக்கொண்டுபோய் புகாரை கொடுததோம் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை –இல்லை

A MUTHUSARATHA
Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.03.02 16:24:24 +0530

Principal District Judge,
Dindigul.